# இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மாற்றம்: 2015 இலிருந்து 2018 வரையிலான இலங்கை - சீனா இராஜதந்திர உறவு

த. கிருஷ்ணமோகன்
சமூக விஞ்ஞானங்கள் துறை
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
tkmatura29@gmail.com

***ஆய்வுச் சுருக்கம்***

*கடந்தகால மஹிந்த இராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலிருந்து குறிப்பாக 2011 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பாரியளவில் நீண்டகால முதலீடுகளைச் சீனா மேற்கொண்டு வருகிறது. கொழும்பு தெற்குத் துறைமுகத்தின் தொடர்ச்சியாகக் காலிமுகத்திடலில் 269 ஹெக்டெயர் கடல்பகுதியை மணல்கொண்டு நிரப்பிப் புதிய நிலப்பகுதியை உருவாக்குவதன் மூலம் கொழும்புச் சர்வதேச நிதி நகரம் என்ற புதிய சிறிய நகரத்தை 1.5 பில்லியன் டொலர் பெறுமதியில் கட்டமைத்து வருகின்றது. இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் பொருளாதாரச் செல்வாக்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் சீனாவின் இராணுவத் திறன்களும் பூகோள அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. சர்வதேசளவில் சீனாவுடன் போட்டி போடுகின்ற இந்தியா, யப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பாதுகாப்பற்ற நிலை தோன்றியுள்ளதாக உணருகின்றன. 2015 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இப்புதிய பதற்றத்தை நீக்குவதற்கான தந்திரோபாய ஆட்சி மாற்றமாக சீனாவின் போட்டி நாடுகளால் கருதப்பட்டன. புதிய ஆட்சியாளர்கள் சீனாவுடன் நடாத்திய தொடர் இராஜதந்திர மட்டப் பேச்சுவார்த்தையின் பயனாகக் கொழும்பு சர்வதேச நிதி நகரத்தின் மூலம் ஏற்பட்டிருந்த பதற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கொழும்புச் சர்வதேச நிதி நகரம் தனித்துச் சீனாவின் முதலீட்டிற்கான நகரமாக மாத்திரமன்றிச் சர்வதேச நாடுகள் முதலீடு செய்யும் நிதி நகரமாகப் புதிய ஆட்சியாளர்களால் மாற்றியமைக்கப்பட்டது. இலங்கைக்குப் பொருளாதார உதவிகளைச் செய்வதன் மூலம் சர்வதேச நலன்களையடைதல் என்ற தந்திரோபாயத்தில் சர்வதேச நாடுகள் பங்கெடுக்கும் வகையில் புதிய அரசாங்கம் தனது வெளியுறவுக் கொள்கையினை மறுசீரமைத்துக் கொண்டது. சீனாவின் முழுமையான ஆதரவு இல்லாமல் இலங்கையின் புதிய ஆட்சியாளர்களால் இதனைச் சாதித்திருக்க முடியாது.*

***திறவுச் சொற்கள்:*** *வெளியுறவுக் கொள்கை, பிராந்தியப் பாதுகாப்பு, கொழும்பு சர்வதேச நிதி நகரம், கடல்சார்பட்டு வீதி, இராஜதந்திரச் செயற்பாடுகள்.*

## 1. அறிமுகம்

கடந்தகால மஹிந்த இராஜபக்ஷா ஆட்சிக் காலப்பகுதியில் (2005-2014) இலங்கை தனது நம்பகத்தன்மையைச் சர்வதேசளவில் இழந்திருந்தது. இலங்கை பின்பற்றி வந்த அணிசேராக் கொள்கையுடன் இணைந்த வெளியுறவுக் கொள்கையின் தோல்வியும், குறிப்பாக மேற்குத்தேச நாடுகள் மத்தியில் இலங்கை ஓரங்கட்டப்பட்டமையும் மஹிந்த இராஜபக்ஷா ஆட்சியின் சர்வதேசத் தோல்விக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. சீனாவுடன் மிகவும் நெருக்கமான உறவினைக்

கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷா 2015 ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தனது சிரேஸ்ட அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவிடம் தோல்வியடைந்தார். மஹிந்த இராஜபக்ஷாவும் அவருடைய குடும்ப அங்கத்தவர்களும், 2005.11.19 தொடக்கம் 2015.01.09 வரை, ஏறக்குறைய பத்து ஆண்டுகள் இலங்கையினை ஆட்சி செய்தனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் ஊழல், மனித உரிமை மீறல்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல் எதிரிகள் நீதிக்குப் புறம்பாகக் கொலை செய்யப்படுதல் மற்றும் காணாமல் போதல் போன்ற குற்றச் செயல்கள் சாதாரணமாக இடம்பெற்றன. இச்சூழலில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான கூட்டணி அரசாங்கம் நல்லாட்சியை இலங்கையில் நிறுவுவதாகத் தேர்தல் காலத்தில் பிரச்சாரம் செய்ததுடன், அணிசேரா கொள்கை என அழைக்கக்கூடிய மிகவும் சமனிலையான வெளியுறவுக் கொள்கையினை வகுத்து இலங்கையினை வழிநடத்தத் தான் விரும்புவதாகப் பிரச்சாரம் செய்திருந்தது. 2015 ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், மற்றும் 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல் காலத்திலும் இலங்கையில் சீனா மேற்கொண்டுவரும் பாரிய முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பாக மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்க தரப்பினரால் கடும் குற்றச்சாட்டுக்கள் மக்கள் முன் வைக்கப்பட்டன. மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகிய இருவரும் இந்தியா மற்றும் அமெரிக்கா சார்புக் கொள்கையுடையவர்களாகத் தேர்தல் களத்தில் நின்றனர் என்ற கருத்தும் பொதுமக்கள், புத்திஜீவிகள், வெகுஜன தொடர்பாளர்கள் மத்தியில் காணப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்த பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் சீனா, இந்தியா, ஜப்பான், பாக்கிஸ்தான், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்தனர். முன்னைய ஆட்சியிலிருந்து புதிய ஆட்சி அடிப்படை மாற்றத்தை கொண்டுள்ளது என்பதற்கான சமிக்ஞையாக இது கருதப்பட்டது. இந்நிலையில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் நிகழ்வது என்ன? இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் காணப்படும் மாற்றம் என்ன? ரணில் விக்ரமசிங்கவின் சீனா விஜயம் வெற்றியளித்துள்ளதா? எதிர்காலத்தில் இலங்கை-சீன உறவு எவ்வாறானதாக அமையும்? அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் சமனிலையினைப் பேணுவதற்கு இலங்கையினால் முடியுமா? போன்ற கேள்விகளுக்கு வெளியுறவுக் கொள்கை தொடர்பான ஆய்வுகளில் மிகவும் ஆழமான பதில்கள் இல்லாமையினால் இவ்விடைவெளியை நீக்கும் வகையில் இவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. பண்புசார் அணுகுமுறை இவ்ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகள் யாவும் இணையத்தள தரவு வங்கியூடாகப் பெற்றுக்

கொள்ளப்பட்டு, உய்த்தறிமுறையூடாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

## 2. கொள்கை அணுகுமுறை

சர்வதேச உறவில் 'கொள்கை அணுகுமுறைகள்' மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான புலமைத்துவ ஆய்வுகள் வெளியுறவுக் கொள்கை அணுகுமுறைகளைப் பொறுத்து இலங்கை இழப்புக்களையும், நன்மைகளையும் சந்தித்துள்ளதாகக் கூறுகின்றன. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அணுகுமுறையினை ஆராய்ந்து பார்க்கும் போது இக்கடினமான உண்மை புலப்படும். சிறிய அபிவிருத்தியடைந்து வரும் நாடாகிய இலங்கை வர்த்தகம், உதவி, முதலீடு ஆகியவற்றிற்காகச் சர்வதேச நாடுகளில் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் முழுமையாகத் தங்கியுள்ளது. சர்வதேச விவகாரங்களில் அதிகளவு வகிபாகங்களை வகிக்காமல் அதிலிருந்து இலங்கை விலகியிருப்பதே இலங்கையின் அபிவிருத்திக்குப் பொருத்தமான தந்திரோபாயமாகும். ஏனெனில் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் உட்பட இலங்கையின் தேசிய நலன்களில் சர்வதேசம் பெரும் பேரழிவை ஏற்படுத்தியுள்ளமை வரலாற்றில் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். 1948 முதல் 1970 வரையில் பின்பற்றப்பட்டு வந்த வெளியுறவுக் கொள்கை தொடர்பான முன்னறிவுடன் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சி (1970 - 1977) மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்தன ஆட்சியை (1977-1988) ஒப்பீட்டுப் பார்க்கும் போது ஒவ்வொரு அரசாங்கத்தின் கொள்கையும் இலங்கையின் நற்பெயரை சீர்குலைத்தல் அல்லது புதுப்பித்தல் என்றதொரு பாடத்தைக் கற்றுத் தந்துள்ளதை உணரலாம். ஜே.ஆர் ஜெயவர்தன யதார்த்த அணுகுமுறையைப் பின்பற்றினாலும் பழமைபேணும் சிந்தனைப் பள்ளியை சேர்ந்தவராகக் கணிக்கப்பட்டார் (Vishwamithra, 2017). அதேநேரம், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கோட்பாட்டு அணுகுமுறையை பின்பற்றினாலும் தீவிரவாதச் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவராகக் கணிக்கப்பட்டார் (Jehan Perera, 2016). இம் முரண்பாடுகள் இலங்கையின் தேசிய நலன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் பெரும் அழிவினை ஏற்படுத்தியிருந்தமை வரலாற்றுப் பதிவுகளாகியுள்ளன.

## 3. முன்னைய ஆட்சியின் கொள்கை அணுகுமுறை

மஹிந்த இராஜபக்ஷா ஆட்சிக்காலத்தில் சர்வதேச விவகாரங்களில் ஈடுபட்டிருந்த சில உயர்குழாமினரின் தவறான சிந்தனையால் வழிநடாத்தப்பட்ட வெளியுறவுக் கொள்கை அணுகுமுறை இலங்கையின் எதிர்காலத்தைச் சீரழித்தது. இலங்கையின் பாரம்பரிய நண்பர்களான மேற்குலக நாடுகளை மஹிந்த இராஜபக்ஷா அரவணைக்கத் தவறியிருந்தார். உள்நாட்டில் நிகழ்ந்த இறுதியுத்த காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மேற்குலக நாடுகளின் ஆலோசனைகளைப் புறந்தள்ளி அவர்களின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் உள்ளாகினார் (Mohotti Prasad, 2015).

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கையினால் உருவாக்கப்பட்ட சர்வதேசச் சூழ்நிலையை 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன தனது ஆட்சியின் ஆரம்பத்திலும் முடிவிலும் சிறப்பாக கையாண்டிருந்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கையின் எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்வதற்காக பிரதான மேற்குத்தேச தலைநகரங்களுக்கு தனது தேர்ந்தெடுக்கப்பட்ட இராஜதந்திரிகளை ஜே.ஆர் ஜெயவர்த்தன அனுப்பி வைத்துக் கடந்தகால எதிர்மறையான விளைவுகளைத் தூய்மைப்படுத்தினார். மஹிந்த இராஜபக்ஷா ஆட்சி முடிவடைந்த பின்னர் இதுபோன்றதொரு தூய்மைப்படுத்தல் நிலையே தோன்றியது.

தனது அரசாங்கத்திற்கு எதிராக மேற்குத் தேசநாடுகள் சதி செய்து விட்டதாக மஹிந்த இராஜபக்ஷ மீண்டும் மீண்டும் தெரிவிக்கின்றார். அவர் பின்பற்றிய வெளியுறவுக் கொள்கையின் எதிர்விளைவுகளால் தான் இது அவருக்கு நிகழ்ந்தது என்பதை அவர் உணரத்தவறிவிட்டார். தனது தவறுகளை மறைப்பதற்கான கவசமாகவே மேற்குத்தேச சதி என்னும் வாசகத்தை மஹிந்த இராஜபக்ஷா பயன்படுத்துவதாக வாக்காளர்கள் கருதினார்கள். உண்மையில், உலகின் முக்கிய தலைநகரங்களில் பணியாற்றிய இராஜதந்திரிகள் பலர் இராஜதந்திர சூத்திரம் தெரியாத தகுதியற்ற பணியாளர்களாக இருந்தனர். பலர் இராஜபக்ஷாவின் உறவினர்களாக இருந்தனர். இதன் விளைவாக அவரது ஆட்சியின் இறுதிக்காலத்தில் இலங்கை தனது மதிப்பை சர்வதேசளவில் இழந்தது. ஆயினும் மீண்டும் இலங்கையின் மதிப்பை சர்வதேசளவில் உயர்த்துவதற்கு அமெரிக்காவிலுள்ள சர்வதேச இராஜதந்திர ஆலோசனை நிறுவனங்களை அணுகி பல மில்லியன் டொலர் கொடுத்து மஹிந்த இராஜபக்ஷா ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டார் (Weliamuna , 2014). இது வெளியுறவுக் கொள்கை சார்ந்து மஹிந்த இராஜபக்ஷா செய்த பாரிய இராஜதந்திரத் தவறாக வரலாற்றில் பதிவிடப்பட்டுள்ளது எனக்கூறலாம்.

இதனை விட பிறிதொரு வெளியுறவுக் கொள்கை சார்ந்த தவறையும் அவர் செய்திருந்தார். ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து மீள்வதற்கு ஆதரவு தேடும் நோக்கத்துடன் உலகின் பல நாடுகளுக்கு இராஜதந்திர விஜயங்களை மேற்கொண்டிருந்தார். ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் ஒவ்வொரு அமர்வுகளுக்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் மேற்கொள்ளப்பட்ட விமானப்பயணங்களின் கடன்சுமை இலங்கையின் வருமானத்தில் பெரும் பாதிப்பைச் செலுத்தியிருந்ததுடன் (Wijedasa Namini, 2015) அதனை மீளச்செலுத்தும் பொறுப்பு பொதுமக்களுடையதானது. மக்கள் வரிப்பணத்தினைச் செலவு செய்து வெளிவிவகார அமைச்சு மட்டத்திலான தந்திரோபாய வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அடையப்பட்ட தந்திரோபாய பயன்கள் செலவு செய்யப்பட்ட

பணத்துடன் ஒப்பிடும் போது மிகவும் சொற்பமானதாக இருந்தன. ஏற்றுமதி, உதவி மற்றும் முதலீடுகள் சார்ந்து அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளில் இலங்கை தங்கியுள்ளது. மஹிந்த இராஜபக்ஷா அரசாங்கம் பெற்றுக் கொண்ட வெளிநாட்டு கடன்கள் அதிகூடிய வட்டிக்குச் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். இக்கடன்களைச் செலுத்த நாட்டு மக்கள் பல தலைமுறைகளாக உழைக்க வேண்டும். புதிய அரசாங்கம் இப் பிரச்சினையை வெற்றிகொள்ள கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட இராஜதந்திரச் செயல்கள் போன்று விவேகமுள்ள இராஜதந்திர வழிகளைப் பின்பற்றும் என மேற்கு நாடுகள் நம்பியிருந்தன.

மேற்குத்தேச நாடுகளின் நட்பினையும், இழந்துபோன விசுவாசத்தினையும் மீளப்பெற்றுக் கொள்ளப் புதிய அரசாங்கம் முயற்சிப்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த வெளியுறவுச் செயற்பாடாகக் கருதமுடியும். இந்த இலக்கை அடைதல் என்பது இலங்கை வகுக்கும் வெளியுறவுக் கொள்கை தொடர்பான நுட்பமான வழிகளிலும், முறைகளிலுமே முற்றிலும் தங்கியிருந்தது. இராஜதந்திரம் மற்றும் வெளியுறவுக் கொள்கை வகுத்தலில் புத்திசாலித்தனம் மற்றும் தொழில்வான்மை பெற்ற கல்வியாளர்களைப் பயன்படுத்திப் புதிய அரசாங்கம் வெளியுறவுக் கொள்கையினைப் புத்தாக்கமுள்ளதாக மாற்றத் தொடங்கியது. பனிப்போர் காலத்தில் இலங்கை பின்பற்றிய அணிசேராமை என்னும் வெளியுறவுக் கொள்கை தற்காலத்தில் செயலிழந்து விட்டது. ஆயினும் நடுநிலை சார்ந்த வெளியுறவுக் கொள்கை மூலம் சர்வதேச நாடுகளுடன் பகைமையின்றி இராஜதந்திர மற்றும் வர்த்தக உறவுகளை இலங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். **வரலாற்று ரீதியாக சீனர்கள், ஐரோப்பியர்கள், அராபியர்கள் மற்றும் அமெரிக்கர்களை இலங்கை கவர்ந்து வந்துள்ளது. இலங்கை உல்லாசப் பயணிகளைக் கவர்ந்துள்ள அழகிய நாடு என்ற வகையில் பாரபட்சமற்ற நடுநிலையான வெளியுறவுக் கொள்கையினைப் பின்பற்றவேண்டும். இவ்வகையில் புதிய அரசாங்கம் வெளியுறவுக் கொள்கையின் எதிர்மறைத் தாக்கத்தை உணர்ந்து அத்தவறை செய்யாதிருக்க முயற்சிப்பதுடன், கடந்தகால அரசாங்கம் விட்ட தவறுகளைத் திருத்தியமைக்கவும் முயற்சிக்கிறது எனக்கூறுமுடியும்.**

### 4. புதிய ஆட்சியின் புதிய சூத்திரம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க தலைமையில் 2015 ஆம் ஆண்டு பதவியேற்ற புதிய அரசாங்கத்திற்குச் சர்வதேசளவில் இழந்த நம்பகத்தன்மையினை மீண்டும் பெற்றுக் கொள்வது பெரும் சவாலாக இருந்தது. அரசாங்க இயந்திரத்தினைச் சிறந்த நுட்பத்துடனும், திறமையுடனும் முகாமை செய்வதன் மூலம் சர்வதேசளவில் இழந்த நம்பகத்தன்மையை மீண்டும் பெற வேண்டியிருந்தது. மஹிந்த இராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த வெளியுறவுக் கொள்கை அணுகுமுறையில் தீவிர மாற்றங்களை மேற்கொள்வதில் புதிய அரசாங்கம் ஆர்வமாக இருந்தது. இதில் முதன்மையான அணுகுமுறை மாற்றமாக 2015 ஆம் ஆண்டு தை மாதம் மைத்திரிபால

சிறிசேனா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் கொழும்பில் சீனாவினால் நிர்மானிக்கப்பட்டு வரும் 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதற்கான கீழ்வரும் மூன்று நியாயங்களை மைத்திரபால சிறிசேன அரசாங்கம் சீனாவிற்கு வழங்கியது *(*Tiezzi Shannon, 2015*).*

I. கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் உள்நாட்டுச் சட்டங்களைக் கருத்தில் கொள்ளாது வரையப்பட்டுள்ளது. இதனால் இத்திட்டம் உள்நாட்டு சட்டங்களை மீறியுள்ளது.

II. கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்படக் கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பைக் கருத்தில் கொள்ளாது இத்திட்டம் வரையப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

III. கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் மேற்கு மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் ஒருபகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் 2014 ஆம் ஆண்டு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் (Xi Jinping*)* இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும். இக்காலப்பகுதியில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மிகவும் பலமான நட்புறவு காணப்பட்டது. கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய சீன அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனத் தொடர்பாடல் நிறுவனம் (China Communication Construction Company - CCCC) 125 மில்லியன் டொலர் பெறுமதியான நஸ்ட ஈட்டினை வழங்கும்படி 2016 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திடம் கோரியது. இந்நிறுவனம் 2015 ஆம் ஆண்டு துறைமுகநகர அபிவிருத்தி திட்டம் இடைநிறுத்தப்பட்ட காலத்திலிருந்து நாள் ஒன்றிற்கு 380,000 டொலர் இழப்பு ஏற்பட்டதாக மதிப்பீடு செய்து, இவ் இழப்பீட்டை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டும் எனக் கோரியது (Blanchard, 2016). அதேநேரம் 2014 ஆம் ஆண்டு சீனா செய்த 403.5 மில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடு 2015 ஆம் ஆண்டு 338 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்தது (Deyshappriya Ravindra, 2016). இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டில் இது 35% மாக பதிவு செய்யப்பட்டிருந்தது (Rajiv Bhatia, Kunal Kulkarni, Lina Lee and Shivani Gayakwad , 2016). அதேநேரம் சீன யாத்திரீகர்கள் இலங்கை வருவது தொடர்ந்தும் அதிகரித்தே வந்தது. 2014 ஆம் ஆண்டு 128,166 சீன யாத்திரீகர்கள் இலங்கை வந்திருந்தார்கள். இத்தொகை 2015 ஆம் ஆண்டு 214,783 யாத்திரீகர்களாக அதிகரித்தது. இது ஏறக்குறைய 67.6% அதிகரிப்பாக மதிப்பீடு செய்யப்பட்டது (Sri Lanka Tourism Development Authority,

2015). 2015 ஆம் ஆண்டு இறுதிக்காலப் பகுதியில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இதுவரை இருந்துவந்த கடும் போக்குத் தளர்வடைந்து சுமுகமான நட்புறவு ஆரம்பமாகியதை அவதானிக்கலாம். இதன் அறிகுறியாக 2016 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சீன மத்திய வங்கி ஒரு மில்லியன் டொலரை இலங்கைக்கு உதவியாக வழங்கிச் சர்வதேசப் பணப்பரிமாற்றத்தில் இலங்கைக்கு ஏற்பட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவியது.

2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் இலங்கையின் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வ விஜயத்தினை சீனாவிற்கு மேற்கொண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையில் இழந்து போயிருந்த உறவினை மீண்டும் திடமாக மீட்டெடுத்தார். இவ்விஜயத்தின் போது சித்திரை மாதம் 7ஆம் திகதி சீனக் குடியரசின் வர்த்தக அமைச்சரும் இலங்கை ஜனநாயக குடியரசின் அபிவிருத்தித் தந்திரோபாயச் சர்வதேச வர்த்தக அமைச்சரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர் (7 agreements signed between Sri Lanka China, 2016). இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பின்வரும் ஏழு விடயங்களுடன் தொடர்புபட்டிருந்தன.

I. இடைநிறுத்தப்பட்டிருந்த துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் இருபது வருடகால இடைவெளிக்குள் பூர்த்தி செய்யப்படும். இதற்குத் தேவையான முழு அதிகாரத்தினையும் இலங்கை வழங்கும்
II. தெற்கு அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டத்தினைப் பூர்த்தி செய்தல்
III. குற்றவாளிகளை இரண்டு நாடுகளும் பரஸ்பரம் பரிமாற்றுதல்
IV. சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்
V. இரண்டு நாடுகளுக்கிடையில் தொழில்நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தம் கைச்சாத்திடல்
VI. சிறுநீரக நோய்பாதிப்பு ஆய்வுத் திட்டத்தில் கைச்சாத்திடல்
VII. சீன தேசிய விஞ்ஞான ஆய்வு மையம் மற்றும் இலங்கை தேசிய விஞ்ஞான ஆய்வு மையத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்

இதன் பின்னர் 2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 9 ஆம் திகதி இருநாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையின் ஏழாம் பந்தியில்

> ‘‘சீனாவின் தந்திரோபாய பொருளாதார பட்டுவீதித் திட்டத்திலும், இருபத்தியோராம் நூற்றாண்டின் கண்டங்களுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களைக் கொண்ட

கடலோரப் பட்டுவீதித் திட்டத்திலும் இலங்கை செயல்திறன்மிக்கதொரு பங்காளராகச் செயற்படும். புராதன காலத்திலிருந்து இந்து சமுத்திர வர்த்தகத்தின் மையமாக இலங்கை இருந்துள்ளது. இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க சீனா உடன்பட்டுள்ளது. பரஸ்பரம் அடிப்படை நலன்களைப் பெறுவதற்கும், நட்புறவு மற்றும் கூட்டுறவினை வளர்ப்பதற்கும் இரண்டு நாடுகளும் ஆதரவு தெரிவித்துக் கொள்ளும்'' (Sri Lanka China Joint Statement: Full Text, 2016) எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகச் சீனாவின் துறைமுகப் பொறியியல் நிறுவனம் (China Communication Construction Company-CCCC யின் துணை நிறுவனம்) மற்றும் மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி (Megapolis and Western Development) அமைச்சு மற்றும் இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றிற்கு இடையில் முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இவ் உடன்படிக்கையின்படி கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் கொழும்பு சர்வதேச நிதி நகரம் (Colombo International Financial City) என பெயர்மாற்றப்பட்டது (Fernando Tharushan, 2016). 2014 ஆம் ஆண்டு மஹிந்த இராஜபக்ஷ அரசாங்கத்தினால் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்குப் பதிலாக இப்புதிய ஒப்பந்தம் சீனாவுடன் மீண்டும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. துபாய்க்கும் சிங்கப்பூருக்கும் இடையிலுள்ளது போன்று இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நிதி நகரமாக இதனைக் கட்டமைக்க இரண்டு நாடுகளும் உடன்பட்டுக் கொண்டுள்ளன. புதிய கொழும்பு சர்வதேச நிதிநகரம் கொழும்பு சர்வதேச நிதிமையம் என்ற புதிய சட்டத்தின் மூலம் நிர்வகிக்கப்படவுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்குக் கரையாண்மைப் பகுதியில் கொழும்பு சர்வதேச நிதி நகரம் உருவாக்கப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு துறைமுக நகரம் என்ற பெயரில் இத்திட்டத்தை ஆரம்பிக்கும் போது சீனாவிற்கு 50 ஹெக்டெயர் நிலப்பரப்பை அறுதியாக (Freehold Rights) வழங்கும் ஒப்பந்தத்தில் மஹிந்த ராஜபக்ஷா கையொப்பம் இட்டிருந்தார் (Shepard Wade, 2016). இந்தியாவின் தென்பிராந்திய எல்லையாகிய இலங்கையில் சீனா நிரந்தரமாக நிலை கொள்வதானது சீனாவிற்குச் சுதந்திரமாகச் செயற்படும் உரிமையினை வழங்குவதற்குச் சமமானதாகும். இதனால் சீனாவிற்கு அறுதியாக நிலத்தை வழங்குவதற்கு இந்தியா தனது கடும் எதிர்ப்பை இலங்கையிடம் தெரிவித்தது. ஆனால் இதற்கு மஹிந்த இராஜபக்ஷா அரசாங்கம்

செவிசாய்க்கவில்லை. இதனால் இந்திய அரசாங்கம் இராஜதந்திர ரீதியான மாற்று வழிவகைகளை கையாளத் தொடங்கியது. அதன் ஒருவிளைவே இலங்கையில் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சிமாற்றம் எனலாம். தற்போது கொழும்பு சர்வதேச நிதி நகர நிலப்பரப்பில் வெளிநாடுகளுக்கு அறுதியான நிலப்பரப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின்படி 269 (2.47 ஏக்கர் = 1 ஹெக்டெயர்) ஹெக்டெயர் பரப்பளவில் நிதிநகரம் நிறுவப்படவுள்ளது. இப்புதிய நிலப்பரப்பு இலங்கை காணிச்சட்டத்தின் கீழ் இலங்கையின் இறையாண்மைப் பிரதேசமாக முதலில் பிரகடனப்படுத்தப்பட்டு இலங்கையின் வரைபடத்திற்குள் உள்ளடக்கப்படும். இதன்பின்னர் புதிதாகச் சேர்க்கப்பட்ட நிலப்பரப்பு கொழும்பு சர்வதேச நிதி மையச் சட்டம் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம் இதில் ஏதாவது ஒன்றின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படும். 269 ஹெக்டெயர் நிலப்பரப்பில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு (தெருக்கள், பூங்காக்கள், நடைபாதைகள்) ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 63 ஹெக்டெயரில் இருந்து 91 ஹெக்டெயராக அதிகரிக்கப்படும் (Fernando Tharushan, 2016). புதிதாகச் சேர்க்கப்பட்ட கொழும்பு சர்வதேச நிதி நகரத்தின் 269 ஹெக்டெயர் நிலப்பரப்பில் 110 ஹெக்டெயர் நிலப்பரப்பு 99 வருட குத்தைக்குச் சீனாவுக்கு வழங்கப்படவுள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 2/5 பங்கு எனக்கூறலாம். ஏனைய நிலப்பரப்பு இலங்கைக்கு சொந்தமானதாகும் (Shepard Wade, 2016). கொழும்புத்துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய சீன அரசாங்கம் கோரிய 125 மில்லியன் டொலர் நஸ்டஈட்டுத் தொகைக்குப் பதிலாக இரண்டு ஹக்டெயர் நிலத்தை மேலதிகமாகச் சீனாவிற்குக் குத்தகைக்கு வழங்க இலங்கை அரசாங்கம் இணங்கியுள்ளது. நிதி நகரத்தில் ஏஞ்சிய நிலப்பரப்பில் மாநகரம் மற்றும் மேற்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் மேற்கு மாகாண நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 30 பில்லியன் டொலர் பெறுமதியான அபிவிருத்தித்திட்டங்களை உருவாக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் உலகிலுள்ள ஏனைய நாடுகளின் மூலதனத்தையும் முதலீட்டையும் இலங்கைக்குள் உள்ளீர்க்க முடியும் என்று இலங்கை அரசாங்கம் நம்புகின்றது. 1.5 பில்லியன் டொலர் பெறுமதியுள்ள கொழும்பு சர்வதேச நிதிநகரத்தில் சர்வதேச வங்கிகள், நிதிநிறுவனங்கள், ஆடம்பர விடுதிகள், ஆடம்பரத் தொடர்மாடி வீடுகள், கடைத்தொகுதிகள், சிறுதுறைமுகம் உட்பட பல உள்ளடங்கியிருக்கும். இதன்மூலம் எண்பத்தி மூவாயிரம் (83,000) தொழில்வாய்ப்புக்கள் வேறுபட்ட துறைகளில் உருவாக்கப்படும் என இலங்கை அரசாங்கம் நம்புகின்றது (The Sunday Times, 2016).

மேலும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிறுவப்படும் புதிய துறைமுகம், நிதிமையம் என்பவற்றைக் கொண்ட நிதிநகரம் 13 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச வெளிநாட்டு நேரடி முதலீட்டினை உள்ளீர்ப்பு செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது

(Daily Mirror, 2017). இலங்கையின் முதல்தர முதலீட்டாளரும், வர்த்தகப் பங்காளருமாகிய சீனா, கொழும்பு சர்வதேச நிதி நகரத்தில் பல பில்லியன் டொலர் பெறுமதியான நேரடி முதலீட்டினை செய்வதற்கு ஆர்வமாகவுள்ளது (Rafique Najam, 2017). சீனாவினால் தலைமை தாங்கப்படுகின்ற கிழக்காசியாவின் பொருளாதார அபிவிருத்திக்கு இலங்கையின் உதவி தேவையானதாகும். சீன மாதிரியிலான அபிவிருத்தி எண்ணக்கருவினை இலங்கையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்ற சிந்தனை இலங்கை அரசாங்கத்திடம் உள்ளது.

2016 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் 80% மான பங்கினை சீனக்கம்பனிக்குக் குத்தகைக்கு வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது. இவ் ஏற்பாட்டின் மூலம் பில்லியன் டொலர் பெறுமதியான கடன் தொகையினை மீளச் செலுத்துவதற்கான வாய்ப்பினை இலங்கை பெற்றுக் கொண்டது. இக்கடன்கள் ஹம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்காகச் சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையாகும். ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியை 750 மில்லியன் டொலர் செலவில் பூர்த்தி செய்வதே இலங்கையின் அடுத்த இலக்காகும். இதற்காக 99 வருடகால குத்தகை அடிப்படையில் 15,000 ஏக்கர் நிலப்பரப்பை விசேட பொருளாதார வலயம் என்ற பெயரில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அருகில் நிர்மானிக்க இலங்கை உடன்பட்டிருந்தது. இவ்விசேட பொருளாதார வலயத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், மின் உற்பத்தி நிலையம் அல்லது ஏனைய கைத்தொழில் முதலீட்டு வலயங்கள் உள்ளடங்கவுள்ளன.

### 5. புதிய ஆட்சியின் சர்வதேசச் சூழல் புரிந்துணர்வு

சீனாவிற்கு விஜயம் செய்திருந்த இலங்கையின் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்காவை சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் (Xi Jinping) பீஜிங்கில் வரவேற்றார். இரு நாட்டுத் தலைவர்களும் தமது நாட்டினது சர்வதேச முக்கியத்துவத்தை அங்கீகரித்து, பேச்சுவார்த்தை மூலம் பரஸ்பர நலன்களிற்கு ஏற்றவகையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை முன்னெடுத்துச் செல்வது எனத் தீர்மானித்துக் கொண்டனர். அதேநேரம் மஹிந்த இராஜபக்ஷா ஆட்சிக் காலத்தில் சீனா வழங்கிய எட்டு பில்லியன் அமெரிக்க டொலர் கடன்களை மறுபரிசீலனை செய்ய அல்லது மறுகட்டமைக்க முடியும் என பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க நம்பினார் (Bhatia, 2016). மறுபுறத்தில் இருபத்தியோராம் நூற்றாண்டு கடல்சார் பட்டு வீதித் திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல சீனாவிற்கு இலங்கை தேவையானதாகும். இந்நிலையில் இலங்கை மக்களையும், அவர்களின் கொள்கைகளையும் மட்டுமே சீனா கருத்தில் கொள்கிறதேயன்றி எந்த தனிநபர்களையும், அரசியல் கட்சிகளையும் கருத்தில் கொள்ளவில்லை என்பதே சீன ஜனாதிபதியின் கருத்தாகும். மஹிந்த இராஜபக்ஷாவையும் அவருடைய குடும்ப உறுப்பினர்களையும் சீன ஜனாதிபதி குறிப்பிடுவது வெளிப்படையாக இருந்தது.

சீனாவின் முதலீட்டை முழுமையாகக் கொண்ட நிதிநகரம் இந்தியா மற்றும்

அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இலங்கை முறுகல் நிலையை உருவாக்கக் காரணமாக இருந்தது. இலங்கையில் சீனாவின் செல்வாக்கு நிரந்தரமாக நிலைகொள்வதற்கு கொழும்பு நிதி நகரம் அடிப்படையாக அமைந்துவிடும் என இரண்டு நாடுகளும் கருதுகின்றன. இதன்மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இதுவரைகாலமும் தமக்கு இருந்த ஆதிக்கத்தை இழக்க வேண்டியேற்படும் என்ற அச்சம் இரண்டு நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளன. இந்தியாவிற்கு மிகவும் அண்மையிலுள்ள நாடு இலங்கை என்ற வகையில் இங்கு சீனா உருவாக்கும் நிதிநகரம் தனது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என இந்தியா அச்சம் கொண்டுள்ளது. இந்தியாவும் சீனாவும் பகைமையுள்ள அயல் நாடுகள் என்ற வகையில், சீனாவினால் இந்தியாவின் வடபிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் இலங்கையில் சீனா நிலைகொள்வதன் மூலம் இந்தியாவின் தென்பிராந்தியத்திற்கும் நகரும் ஆபத்து உள்ளதாக இந்தியா கருதுகின்றது. இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் இந்தியாவின் வடபிராந்தியத்தில் இந்தியாவிற்கு சீனாவினால் ஏற்படக்கூடிய பாதுகாப்பின்மையினைக் கருத்தில் கொண்டு பெருமளவிலான கைத்தொழில் முயற்சிகளையும், பாதுகாப்புத்துறையுடன் தொடர்புடைய விடயங்களையும் இந்தியாவின் தென்பிராந்தியங்களில் உருவாக்கியுள்ளனர். மேலும், இந்தியாவின் கணனி தொடர்பாடல் வலைப்பின்னலின் மையப்பகுதியும் தென்பிராந்திய மாநிலங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பின்னணியில் தனது எதிர்நாடு ஒன்று தனது தென்பிராந்திய எல்லையில் நிலைகொள்வதை இந்தியா அச்சத்துடன் நோக்குவதிலுள்ள அறிவுசார் நிலை ஏற்றுக்கொள்ளக்கூடியதேயாகும். இந்தியாவின் நியாயமான அச்சத்தினைப் போக்கவேண்டியதும் இந்தியாவின் தென்பிராந்திய பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டியதுமான பொறுப்பு நெருங்கிய நட்பு நாடு என்ற வகையில் இலங்கைக்கு உள்ளது. இவ்வாறு செயற்படுவதன் மூலம் தான் பக்கச்சார்பற்ற வெளியுறவுக் கொள்கையினையும் இதன்மூலமான அபிவிருத்தியையும் இலங்கையினால் முன்னோக்கி நகர்த்த முடியும். இதனையே 2015 ஆம் ஆண்டு பதவியேற்ற புதிய அரசாங்கம் மேற்கொண்டது. மஹிந்த இராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பின்பற்றப்பட்ட வெளியுறவுக் கொள்கையினால் இலங்கை எதிர்கொண்டுள்ள எதிர்விளைவுகளிலுள்ள அறிவுசார் நிலையினைப் புரிந்து கொண்ட சீனாவும் இலங்கையின் மறுசீரமைக்கப்பட்ட கொழும்பு சர்வதேச நிதிநகர அபிவிருத்திக்குத் தனது முழுமையான ஆதரவினை வழங்கியது. இதனடிப்படையில் நிதிநகர அபிவிருத்தித் திட்டத்தில் ஏனைய உலகநாடுகள் முதலீடு செய்வதை சீன அரசாங்கம் வரவேற்கத் தயாராகியுள்ளது.

ரணில் விக்ரமசிங்க சீனாவுடன் ஆரம்பித்துள்ள இராஜதந்திர செயற்பாடுகள் வெற்றிகரமாக அமைந்திருந்தன. ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுடன் சிறந்த உறவுகளைப் பேணத் தொடங்கியுள்ளதுடன், இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அனைவரும் சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழலையும் உருவாக்கி அதிகார விசைப்பண்பிற்கான

மீள்சமனிலையினையும் உருவாக்கியிருந்தார். கொழும்பு நிதி நகரத்தினைச் சீனாவிற்கான நிதி நகரமாக மட்டும் கட்டமைக்காமல் இந்துசமுத்திரப்பிராந்தியம் முழுவதற்குமான நிதி நகரமாகவும், வியாபார மையமாக உருவாக்கவும், ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கிச் சேவையை இங்கு உருவாக்கவும் இலங்கையும், சீனாவும் உடன்பட்டுள்ளன. இது புதிய அரசாங்கத்திற்குக் கிடைத்த இராஜதந்திர ரீதியிலான வெற்றியாகும். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் பூகோள அரசியல் மாற்றங்களையும், புவிசார் பொருளாதாரத் தந்திரோபாயங்களையும் சரியாகப் புரிந்து கொண்டு இலங்கையை பொருத்தமான பாதையில் பயணிக்கச் செய்துள்ளது. இவ்வகையில் இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் சுமுகமான உறவினைப் பேணவும், இலங்கை மக்களின் முன்னேற்றம், சமாதான சகவாழ்வு என்பவற்றைத் தெற்காசிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவும் ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் முயற்சிக்கின்றது எனக் கூறலாம்.

### 6. முடிவுரை

சீனாவினால் 1.5 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது மைத்திரிபால சிறிசேனா அரசாங்கம் இலங்கையின் உள்கட்டமைப்பு அபிவிருத்திக்குத் தொடர்ந்தும் சீன முதலீடுகள் மற்றும் நிதியுதவி தேவையானது என நம்புகிறது. இந்நிலையில் சீனாவுடன் அதிக நட்புறவினை இலங்கை பேணுவதால் இந்தியாவிற்கு ஏற்படக் கூடிய அச்சத்தினை நீக்க வேண்டிய பொறுப்பு இலங்கைக்கு இருந்தது. இலங்கையுடன் மிகவும் நெருங்கிய உறவும், நட்பும் கொண்ட நாடு இந்தியாவாகும். இலங்கை சீனாவுடன் கொண்டிருக்கும் நட்புறவினால் இந்தியாவின் பாதுகாப்பு பாதிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை இலங்கை இந்தியாவிற்கு வழங்க வேண்டும். இலங்கையின் மிகவும் நட்புநாடுகளாகிய இந்தியாவும் சீனாவும் தமக்கிடையில் நடாத்தும் அதிகாரப் போட்டியில் ஒருவர் தோல்விடைந்து மற்றவர் வெற்றியடைய இலங்கை உதவிசெய்யாது என்ற உத்தரவாதத்தையும் இலங்கை வழங்கியுள்ளது. அதேநேரம் இராஜதந்திர உறவின் மூலம் இலங்கையின் இறைமை சர்வதேசளவில் பாதுகாக்கப்படுவதற்கும், பொருளாதார அபிவிருத்திக்குத் தொடர்ந்து இந்தியா, சீனா, அமெரிக்கா, யப்பான் ஆகிய நாடுகளின் ஆதரவையும் இலங்கை பெற்றுக் கொண்டுள்ளது.

ஆசிய, பசுபிக் பிராந்தியம் மிகவும் வேகமான பொருளாதார செழிப்புமிக்கதொரு பிராந்தியமாக வளர்ந்து வருகின்றது. இப்பொருளாதார திரட்சியுள்ள இடத்திலிருந்து இலங்கை தனது பொருளாதார அபிவிருத்திக்கான உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இதில் யாரும் தவறு காணவோ அல்லது அச்சம் கொள்ளவோ தேவையில்லை. சீனா தனது கைத்தொழில் துறைக்குத் தேவையான சக்திவளத்தில் ஏறக்குறைய 70% த்தினை இந்து சமுத்திர பிராந்தியத்தினூடக இறக்குமதி செய்து வருகின்றதுடன், இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும், உலகளாவிய

ரீதியிலும் சீனா மிகவும் வேகமாக பலமடைந்தும், அதிகாரத்தைப் பெற்றும் வளர்ந்து வருகின்றது. இதனால் இலங்கை எவ்விதத்திலும் அச்சமடையாமல், சீனாவின் எழுச்சி மூலம் கிடைக்கும் பலாபலன்களைத் தானும் அறுவடை செய்து அனுபவிப்பதில் கவனம் செலுத்துவதில் தவறு இருக்க முடியாது. ஏனெனில் சமகால இலங்கையின் சர்வதேச உறவும், அதன் தன்மையும், இயல்பும் இதுவாகவே இருக்க முடியும்.

அதேநேரம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பு, சமாதானம், தந்திரோபாய சமனிலை என்பன பாதிக்கப்படும் வகையில் இலங்கை எச்சந்தர்ப்பத்திலும் செயற்பட முடியாது. தனது அயல் நாடுகளுடன் சமநிலையான நட்புறவினை பேண இலங்கை தயாராக இருக்க வேண்டும். இலங்கையின் வெளியுறவுக் கொள்கைச் சமனிலையின்மையால் இந்தியாவும், அமெரிக்காவும் ஏதாவது சிக்கல்களுக்குள் உட்படுமாயின் இலங்கையும் சிக்கல்களுக்குட்படும் என்பதை அறிவுசார் நிலையில் சிந்தித்து இலங்கை செயற்பட வேண்டும். எனவே இந்தியாவினையும், அமெரிக்காவினையும் சிக்கலுக்குள்ளாக்கித் தானும் சிக்கலுக்குள்ளாக இலங்கை முயற்சிக்கக் கூடாது. மறுபக்கத்தில் சீனா இலங்கையில் மேற்கொள்ளும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை இந்தியாவும், அமெரிக்காவும் தமக்கான தொல்லையாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் எவ்வித பாதுகாப்பு உடன்படிக்கைகளிலும் சீனாவுடன் இலங்கை கைச்சாத்திடக் கூடாது. ஆனால் இதுவரை அவ்வாறான முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதும், இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளை விட்டு விலகி இலங்கை செல்லவில்லை என்பதுவே சமகால இலங்கையின் வெளியுறவுக் கொள்கையிலுள்ள அறிவுசார் நிலையாகும்.

### உசாத்துணை நூல்கள்


Aneez, S. (2015, January 22), **Sri Lanka softens its stance on China port city deal**, Reuters, Retrieved from http://www.reuters.com/article/us-sri-lanka-china-portcity-idUSKBN0KV2FV20150122

Bhatia, G. (2016, April 24), **China, India tussle for influence as Sri Lanka seeks investment**, CNBC. Retrieved from http://www.cnbc.com/2016/04/24/global-opportunities-china-india-tussle-for-influence-as-sri-lanka-develops.html

Blanchard, B. (2016, April 9), **Sri Lanka requests equity swap for some of its $8 billion China debt**, Reuters, Retrieved by http://www.reuters.com/article/us-china-sri-lanka-idUSKCN0X60CH

Daily Mirror, 2017.10.04, **Govt. begins drafting separate legal framework for Financial City**, URL Available on http://www.dailymirror.lk/137779/Govt-begins-drafting-separate-legal-framework-for-Financial-City

Deyshappriya Ravindra N.P, 2016, **Sri Lanka - China Economic Relations in Comparative Perspective Ample Room to Grow**, Working Paper Series, Lakshman Kadirgamar Institute of International Relations And Strategic Studies, URL Available on, https://www.lki.lk/wp-content/uploads/2016/12/Sri-Lanka_China-Economic-Relations_Working-Paper.pdf

Fernando Tharushan, 12 Aug, 2016, **Tripartite agreement signed for Colombo International Financial City**, News 1st, MTV Channel (Pvt) Ltd, MBC Networks (Pvt) Ltd, URL Available on https://www.newsfirst.lk/2016/08/12/government-signs-tripartite-agreement-colombo-international-financial-city/

Jehan Perera 11,April 2016, **Five Necessary Transformations & The Legacy of Madam Bandaranaike**, Colombo Telegraph, URL Available on https://www.colombotelegraph.com/index.php/five-necessary-transformations-the-legacy-of-madam-bandaranaike/

Mohotti Prasad, 26, April 2015, **Is Mahinda Rajapaksa Suffering From The Complex of Excessive Self-Love?**, Colombo Telegraph, URL Available on https://www.colombotelegraph.com/index.php/is-mahinda-rajapaksa-suffering-from-the-complex-of-excessive-self-love/

Rafique Najam, 01, June 2017, **Growing Chinese Investments in Sri Lanka, Institute of Strategic Studies**, URL Available on http://issi.org.pk/wp-content/uploads/2017/06/IB_Areeba_dated_1-6-2017.pdf

Rajiv Bhatia, Kunal Kulkarni, Lina Lee and Shivani Gayakwad , December 2016, **Chinese investments in Sri Lanka, Gateway House: Indian Council on Global Relations**, URL Available on https://www.gatewayhouse.in/chinese-investments-sri-lanka-2/

Shepard Wade, 12, August 2016, **Sri Lanka's Colombo Port City: The Frontline of China And India's Geopolitical Showdown**, Forbes, URL Available on https://www.forbes.com/sites/wadeshepard/2016/08/12/a-look-at-colombo-port-city-the-frontline-of-china-and-indias-geopolitical-showdown/#29e902ee2675

**Sri Lanka China joint statement: Full Text**, 09, Apr 2016, Economy next, URL Available on https://economynext.com/Sri_Lanka_China_joint_statement__Full_Text-3-4712-10.html

Sri Lanka Tourism Development Authority, 2015, **Monthly Bulletin December 2015** (p.3), Retrieved from http://www.sltda.gov.lk/sites/default/files/Page3Dec15.pdf

The Sunday Times, 2016.08.14, **No freehold land, but 83,000 jobs, US$13 billion in new financial city**; Ministry, URL Available on http://www.sundaytimes.lk/160814/news/no-freehold-land-but-83000-jobsus13-billion-in-new-financial-city-ministry-204972.html

Tiezzi Shannon,26,March 2015, **Suspended Sri Lankan Port Project Complicates Sirisena's Trip to China**, The Diplomat, URL Available on https://thediplomat.com/2015/03/suspended-sri-lankan-port-project-complicates-sirisenas-trip-to-china/

Vishwamithra, 10, May 2017, **Looking Back at JR's Kandy March: Was JR an Opportunist, A Racist, Both or Neither?** Colombo Telegraph, URL Available on https://www.colombotelegraph.com/index.php/looking-back-at-jrs-kandy-march-was-jr-an-opportunist-a-racist-both-or-neither/

Weliamuna J C, 25.02.2014, **Why the Government of Sri Lanka Fails Internationally, Ground Views**, URL Available on, https://groundviews.org/2014/02/25/why-the-government-of-sri-lanka-fails-internationally/

Wijedasa Namini, 19, July 2015, **Rajapaksa's sky jack of Sri Lankan flights : Rs 785M for three years**, The Sunday Times, URL Available on http://www.sundaytimes.lk/150719/news/rajapaksas-sky-jack-of-sri-lankan-flights-rs-785m-for-three-years-157392.html

**7 agreements signed between Sri Lanka China**, 08.April 2016,Hiru News, URL Available on http://www.hirunews.lk/130372/7-agreements-signed-between-sri-lanka-china